
www.newwisdomministries.com

# ஞான ஒலி



# புரியாத புதிர்கள்



ஞானம் – 6 – ஒலி 18 – 30.04.2023

# உலகங்களுக்குள் புது உலகம்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் ஞான ஒலி மின்னிதழின் வாசகப் பெருமக்களாகிய உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு மனிதனும் ஓர் சிறப்பான உலகத்தை தனக்குள் வைத்திருக்கின்றார். அந்த உலகத்தில் அவரே எல்லாமுமாக இருக்கின்றார். அவருக்குள் அவரே அனைத்தையும் தீர்மானிக்கின்றவராகவும், செயலாக்கம் செய்பவராகவும் இருப்பதோடு இல்லாமல், நன்மை தீமை அனைத்திற்கும் காரணமாகவும் இருக்கின்றார். அவரே ராஜா, அவரே மந்திரி, அவரே தனி நீதிபதியாகவும் இருக்கின்றார்.

அந்த உலகத்தில் அவர் என்ன சட்ட திட்டம் வகுத்து வைத்துள்ளாரோ, அதன்படிதான் அவர் யோசிக்கின்றார், முடிவெடுக்கின்றார். அவருக்கு நிகர் அவரே.

அலைபேசி வந்ததிலிருந்து அது வெட்ட வெளிச்சமாயிருக்கின்றது. அவரின் உலகத்தில் வாழ அவருக்குப் பிரியமானவர்களுக்குமட்டுமே விசா கொடுக்கின்றார். அவருக்குப் பிரியமில்லாதவர்களை அவருக்குள் உள்ள நரகப்பகுதியில் வைத்திருப்பார். அவர்களை சாகவும் விடமாட்டார், விடுதலையும் செய்ய மாட்டார். அதோடு அவர்களும் அவரின் உலகத்தை கலவர உலகமாகவே ஆக்கிக் கொண்டிருப்பார்கள்.

அப்படிப்பட்ட உலகத்தைத் சரி செய்யக் கற்றுத்தரவே இயேசு பெருமான் நம்மை அழைக்கின்றார்.

முதலில் அப்படிப்பட்ட உள்ளுலகத்தைவிட்டு வெளியே வந்து வெளியிலிருக்கும் உலகத்தையும், இரத்தமும் சதையுமாக உள்ள மற்ற மனித உயிர்களையும், அவர்களுக்குள் உள்ள உலகங்களையும் அறிந்து புரிந்து அன்பு செய்ய வேண்டும். இது ஒரு பிரபஞ்சத்திலிருந்து மறு பிரபஞ்சத்திற்குப் பயணம் செய்வது போன்றதுதான். மற்றவர்கள் வேற்றுக் கிரக வாசிகளாகத்தான் அவர்களைப் பார்க்க வேண்டும். அந்த உறவில், நமக்குள் இருக்கும் உலகத்தை முற்றிலுமாக மறந்து, மற்றவரின் உலகத்தில் உள்ள நியாய தர்மங்களைக் கணக்கில் கொண்டு அவர்களின் சட்ட திட்டங்களின்படி பழக

வேண்டும். அதைத்தான் சமூக உறவென்று கூறுகின்றோம்.

ஆளாளுக்கு ஒரு தனிச் சட்டமென்பதை மறந்து, ஆன்மீகம் படைத்திருக்கும் புது உலகம் ஒன்றில் அனைவரும் சமமென்ற உறவைக் கற்றுக்கொண்டு புது மனிதர்களாய் வாழவேண்டும்.

இங்குதான் சிலுவைப் பயணம் ஆரம்பிக்கின்றது. தனிமனித விருப்பு வெறுப்புகளைத் தவிர்த்து, புத்துகலக வாசிகளாக வாழ்பவர்களே. இன்றைய நவீனத் தேவையாக உள்ளது.

தனக்காக வாழாமல், பிறருக்காக வாழ்வது என்ன என்பதைத்தான் இயேசுவின் பிறப்பும் வாழ்வும் நமக்குக் கற்றுத் தருகின்றது.

பிறருக்காக சிந்தித்து, தன்னலமின்றி பிறரை அன்பு செய்யும்போதுதான், புத்துலகம் புரிய ஆரம்பிக்கும். அனைத்தும் தெளிவாகும். தன்னுள், தனியாக, தனக்காவே வாழ்வதை நிறுத்திவிடுவார்கள் அது புதுவிதமான தெய்வீக அனுபவத்தைத் தரும். ஒருமுறை, ஒரே ஒருமுறை அந்த அன்பின் அனுபவத்தை பெற்றவர்கள், பிறகு எதற்காகவும், அதை இழக்கமாட்டார்கள்.

கிறிஸ்டோபர் ரென் லண்டனைச் சேர்ந்த புகழ்பெற்ற கட்டிடக் கலை நிபுணர். அவர்தான் ராயல் செசைட்டி ஆஃப் லண்டன் என்ற அமைப்பை உருவாக்கியவர். அவரின் அறிவியல் திறனையும், அவரின் பங்களிப்பையும் பற்றி ஐசக் நியூட்டன் மற்றும பிளேய்ஸ் பாஸ்கல் போன்றவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

ஒருமுறை ஒரு ஆலயத்தைக் கட்டும் பணி அவரிடம் கொடுக்கப்பட்டது. அதிநவீன கட்டிடக் கலையோடு தூண்களே இல்லாத ஓர் ஆலயத்தைக் கட்டினார். அது ஒரு வட்டவடிவ ஆலயம். அவரை வெறுத்த சிலர், தூண்கள் இல்லாவிட்டால், ஆலயம் விரைவில் இடிந்துவிடும். ஆகவே, தூண்கள் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்கள்.

அந்த ஆலயத்திற்கு எந்தவித பாதிப்பும் வராது என்ற அவரது வாதத்தை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் அவர் அந்த ஆலயத்திற்குள் இரண்டு பெரிய தூண்களை கட்டிமுடித்தார். அனைவருக்கும் மனநிம்மதி, திருப்தி.

அதன்பிறகு அந்த ஆலயத்தின் 50வது ஆண்டு விழாவை சிறப்பிக்க ஆயலத்தைப் புதுப்பிக்கும்போது, அனைவருக்கும் பெரிய ஆதிர்ச்சி, அச்சர்யம். காரணம் ரென் அவர்கள் கட்டிய அந்த இரண்டு தூண்களும் அந்த ஆலயத்தின் மேற்கூரையோடு இணைக்காமல் கட்டப்பட்டிருந்தது. மேற் கூரைக்கும் அந்தத் தூணுக்கும் இடையே இரண்டு அடி இடைவெளி இருக்குமாறு அவைகளை அவர் கட்டியிருந்தார். மக்களின் வேண்டுகோள்படி அவர்களின் திருப்திக்காக ரென் அவர்கள் அவ்வாறு செய்திருந்தார்.

ரென் தன்மீதும் தனது கட்டிடத்திறமை, அவரின் கட்டிட வடிவமைப்பு, அவர் கட்டிய ஆலயத்தின் உறுதி ஆகியவற்றின் மீதும் அவர் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார். நூறு ஆண்டானாலும் அந்த ஆலயத்திற்கு எந்தவிதப் பாதிப்பும் வராது என்று முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

அதுவே அவர் தனக்கு கொடுத்த உச்சபட்ட மரியாதையும் மதிப்பும்.

அதுவரை அப்படிப்பட்ட தூணில்லாத ஒரு கட்டிடத்தை யாரும் கண்டதில்லை. அதனால் அப்படிப்பட்ட ஒரு ஆலயம் இடிந்துவிடும் என்ற மற்றவர்கள் நம்பினார்கள் பயந்தார்கள்.

அறியாதவர்களுக்கு, எதுவும் நம்பிக்கை தராது. அறிந்தவர்களுக்கே, அனைத்தும் விளங்கும்.


ஒருவரின் மேதாவித்தனம், மற்றவருக்கு விதாண்டவாதமாகத்தான் இருக்கும்.

அறியாதவர்களுக்கும், புரியாதவர்களுக்கும் ஏற்றபடி நடந்து கொள்வதுதான் நடைமுறைச் சிக்கலைத் தீர்க்கும் என்று அறிந்த ரென், தனது செயலை அறியும் காலத்தில்தான் அறிந்துகொள்ளப்படும் என்ற உணர்வோடு மற்றவர்களுக்காக அந்த இரண்டு தூண்களைக் கட்டினார்.

அதற்காகத்தான் இயேசுவும் கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்றாரோ? புரியாத புதிர்கள் மனிதர்கள்.

# விவிலியம் அறிவோம்





## எண்ணிக்கை நூல் முன்னுரை

ஐந்நூல்களில் நான்காவது நூலாக எண்ணிக்கை நூல் வருகிறது. கிரேக்க மொழிபெயர்ப்பான எழுபதின்மர் விவிலியத்தில் இந்நூலின் பெயர்அரித்மோய் (*Aritìmoi*) என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் எண்ணிக்கை என்பதாகும். இந்த நூலின் முதல் பிரிவிலும் இருபத்து ஆறாவது பிரிவிலும் இஸ்ரயேலின் ஆண் மக்கள் அனைவரும் எண்ணப்பட்டு கணக்கெடுக்கப்படுகின்றனர். மேலும் இந்நூலில் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பல பட்டியல்கள் வருகின்றன. உதாரணமாக, குலங்களின் முதல்வர்கள் பட்டியல் (எண் 1:5-15); பலிப்பீடம் திருப்பொழிவு செய்யப்பட்ட நாளில் கொண்டுவரப்பட்ட காணிக்கைகளின் பட்டியல் (எண் 7:10-83);கானான் நாட்டை உளவுபார்க்க அனுப்பப்பட்டமக்கள் தலைவர்களின் பட்டியல் (எண் 13:4-15); பெருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களின்போது கொண்டுவரவேண்டிய காணிக்கைகளின் பட்டியல் (எண் 28:1-29:38); மற்றும் மிதியானியர்களைவெற்றிகொண்டபோது சூறையாடிய கொள்ளைப் பொருள்களின் பட்;டியல் (எண் 31:32-52) ஆகியவற்றைக் கூறலாம். மக்களின் எண்ணிக்கையை இரண்டு தடவைகள் கணக்கெடுப்பதாலும், எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பல பட்டியல்கள் வருவதாலும் இந்நூலுக்கு எண்ணிக்கை நூல் என்ற தலைப்பு மிகவும் பொருத்தமாகவே உள்ளது.

எபிரேய மொழியில் இந்நூலின் பெயர் பாமிட்பார் (*Bamidbar*) என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் பாலைவனத்தில் என்பதாகும். சீனாய் பாலைவனத்தில் கடவுள் மோசேயுடன் பேசுவதுடன் (எண் 1:1) இந்நூல் தொடங்குகிறது. எண்ணிக்கை நூல் விடுதலைப் பயணம் நூலுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. விடுதலைப் பயணம் நூல் இஸ்ரயேல்

மக்கள் எகிப்தில் குடியேறி வாழ்வதுடன் தொடங்குகிறது (விப 1-13). அதன்பின் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பாலைவனத்தில் பயணம் செய்வதில் தொடர்கிறது (விப 14-19). சீனாய் மலையில் கடவுள் அவர்களோடு உடன்படிக்கை செய்கிறார். அதனைத் தொடர்ந்து இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்திலேயே தங்குவதுடன் விடுதலைப் பயணம் நூல் நிறைவுக்கு வருகிறது. இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்தில் ஏறக்குறைய ஒருவருடம் தங்குகிறார்கள் (எண் 1-10). அதனைத் தொடர்ந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தை அவர்கள் தொடங்குகிறார்கள். இந்தப் பயணத்தை அவர்கள் எப்படி அமைக்கிறார்கள் என்பதை எண்ணிக்கை நூல் கூறுகிறது. ஏறக்குறைய 38 ஆண்டுகள் இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்கிறார்கள். இந்தக் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் எண்ணிக்கை நூல் பதிவுசெய்கிறது (எண் 11-25). நூலின் இறுதியில் இஸ்ரயேல் மக்களை மோவாபு சமவெளியில் சந்திக்கிறோம். அவர்கள் அங்கே பாளையம் இறக்கித் தங்கியிருக்கிறார்களட. விடுதலைப் பயணம் நூலிலும் எண்ணிக்கை நூலிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள பாலைவனப் பயணங்களில் பல ஒற்றுமைகள் உள்ளன. எகிப்திலிருந்து வெளியேறிய மக்கள் பாலைவனம் வழியாக சீனாய் மலைக்கு வருகின்றனர் (விப 14-19). சீனாய் மலை உடன்படிக்கைக்குப் பின் பாலைவனம் வழியாக வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் பயணிக்கின்றனர் (எண் 11-25). பாலைவனப் பயணத்தின்போது பல நிகழ்வுகள் நடக்கின்றன. ஆண்டவருக்கும் அவரால் நியமிக்கப்பட்டத் தலைவரான மோசேக்கும் எதிராக மக்கள் முணுமுணுக்கின்றனர்; கிளர்ச்சிகள் செய்கின்றனர். மோசேயால் அந்த மக்களைக் கட்டுப்படுத்தி வழிநடத்த முடியவில்லை. அவர்களை வழிநடத்துவதற்குப் பல உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர் (+விப 18; எண் 11:16-39). மேலும் ஆண்டவர் அவர்களைப் பராமரித்து வழிநடத்துகிறார். அவர்களோடு நடந்து வருகிறார். அவர்களின் தேவைகளைத் தீர்த்துவைக்கிறார் (விப 15:22-17:7; எண் 11:31-34; 20:1-13).

எண்ணிக்கை நூலின் முன்னும் பின்னும் வருகின்ற லேவியர் நூல் மற்றும் இணைச்சட்டம் நூல் ஆகியவற்றுடனும் எண்ணிக்கை நூலுக்கு தொடர்பு உள்ளது. லேவியர் நூல் இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கைக்கான ஒரு சட்டத் தொகுப்பாக, ஒழுங்குடன் அமைந்த ஒரு உடன்படிக்கை ஆவணமாக உள்ளது. எண்ணிக்கை நூல் பல திருத்தங்களைக் கொண்ட சட்டத் தொகுப்பாக, திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான வரலாற்றுச் சூழ்நிலைகள் பதிவுசெய்யப்பட்ட ஒரு ஆவணமாக உள்ளது. எண்ணிக்கை நூல் இணைச்சட்டம் நூலுக்கான ஒரு பின்புலத்தையும் அமைத்துத் தருகிறது. எண்ணிக்கை நூலின் இறுதிப் பிரிவுகளில் இஸ்ரயேல் மக்கள், யோர்தானுக்கு அக்கரையில் எரிகோவுக்கு அருகிலுள்ள மோவாபிய சமவெளிகளில் பாளையமிறங்கினார்கள் (எண் 22:1) எனப் பார்க்கிறோம். இணைச்சட்டம்

நூலின் உள்ளடக்கமாக வருகின்ற மோசேயின் மறையுரைகள் மற்றும் உடன்படிக்கைப் புதுப்பித்தல் ஆகியவை மோவாபு சமவெளிகளில்தான் நிகழ்கின்றன (எண் 36:13; காண்க இச 1:5, 29:1).

ஐந்நூல்களில் வருகின்ற ஏனைய நூல்களைப்போல எண்ணிக்கை நூலும் பல இலக்கிய அமைப்புகளைக் கொண்டதாக உள்ளது. ஆனால் ஏனைய நூல்களைப்போல ஒழுங்கான ஒரு கட்டமைப்பு இல்லாததுபோல் தோற்றமளிக்கிறது. திருவிவிலியத்திலேயே மிகவும் ஒரு குழப்பமான கட்டமைப்பைக் கொண்ட நூலாக எண்ணிக்கை நூல் உள்ளது என்பது பலருடையக் கருத்தாக உள்ளது. அதற்குக் காரணம் எண்ணிக்கை நூலில் கிளர்ச்சிகள் பற்றிய பதிவுகளும் சட்டங்கள் பற்றிய பதிவுகளும் அடுத்தடுத்து எதிரும் புதிருமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனஎனக் கூறப்படுகிறது. இந்தக் கட்டமைப்பின் வழியாக ஆசிரியர் ஒரு சில இறையியல் கருத்துக்களைக் கூற விழைகிறார் என்பது வாதமாக இருக்கிறது. எனினும் ஆழமாக ஆய்வு செய்யும்போது எண்ணிக்கை நூல் ஒரு சிறந்த இலக்கியக் கட்டமைப்பைக் கொண்டதாக உள்ளது தெரிய வருகிறது. முதலாவதாக, இந்த நூலில் வருகின்ற கணக்கெடுப்புகளை அடிப்படையாகக் கொண்டு எண்ணிக்கை நூலை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் கணக்கெடுப்பு முதல் பிரிவில் வருகிறது. சீனாய் பாலைவனத்தில் ஏறக்குறைய ஒரு வருட காலம் தங்கியிருந்தபின் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கியப் பயணம் தொடங்குகிறது. பயணம் தொடங்குமுன் முதல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரண்டாவது கணக்கெடுப்பு இருபத்து ஆறாவது பிரிவில் வருகிறது. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் பாலைவனப் பயணம் முடிந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையுமுன் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு இது. எனவே முதல் பிரிவிலிருந்து இருபத்து ஐந்தாவது பிரிவுவரை உள்ளபதிவுகளில் வாழ்கின்ற மக்கள் முதல் தலைமுறையைச் சார்ந்தவர்கள். இருபத்து ஆறாவது பிரிவிலிருந்து முப்பத்து ஆறாவது பிரிவு முடிய வருகின்ற பிரிவுகளில் உள்ள பதிவுகளில் வாழும் மனிதர்கள் இரண்டாவது தலைமுறையைச் சார்ந்தவர்கள். இரண்டு தலைமுறை மனிதர்களையும் அடிப்படையாக வைத்து இந்த நூலை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## எண்ணிக்கை நூலின் அடிப்படைக் கட்டமைப்பு

பிரிவு - 1 1-25 பாலைவனப் பயணத்தில் முதல் தலைமுறையினர்
பிரிவு - 2 26-36 பாலைவனப் பயணத்தில் இரண்டாம் தலைமுறையினர்

இரண்டாவது கணக்கெடுப்பு நடத்தப்படுகையில் எகிப்திலிருந்து விடுதலை பெற்று, பாலைவனத்தில் பயணத்தில் பங்கெடுத்தவர்கள் யாரும் உயிருடன் இல்லை. அவர்கள் அனைவரும் பாலைவனத்திலேயே இறந்துவிட்டார்கள் (எண் 25:64). எனவே 26 வதுபிரிவு இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்குகிறது எனலாம்.

எண்ணிக்கை நூலின் இந்த இரண்டு பிரிவுகளில் முதல் பிரிவை

மீண்டும் இரண்டாகப் பிரிக்கலாம். எண்ணிக்கை நூலின் முதல் பத்து பிரிவுகளில் இஸ்ரயேல் மக்கள் சீனாய் பாலைவனத்திலேயே தங்கியிருக்கிறார்கள். முதல் தலைமுறையைச் சார்ந்த இந்த மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கியத் தங்கள் பயணத்திற்காகத் தயாரிக்கிறார்கள். எண் 11-25 வரையுள்ள பிரிவுகளில் பாலைவனப் பயணம் தொடர்கிறது. வழியில் தொடர்ந்து பல கிளர்ச்சிகள் நடக்கின்றன. மோவாவு சமவெளியில் பாளையம் அமைக்கும்வரை கிளர்ச்சிகள் தொடர்கின்றன. மோவாபு சமவெளியை அடையும்போது முதல் தலைமுறை இஸ்ரயேலர் அனைவரும் இறந்துவிடுகிறார்கள். எண் 26-36 வரையுள்ள பிரிவுகள் இரண்டாம் தலைமுறையினர் பாலைவனத்தைவிட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டில் நூழைவதற்காக செய்யும் தயாரிப்புகளைக் கூறுகின்றன. எனவே எண் 1-10 வரையுள்ள பகுதிக்கும் எண் 26-36 வரையுள்ள பகுதிக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணமுடிகிறது. இரண்டு பகுதிகளும் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்திற்கான தயாரிப்புகளாக உள்ளன. இதை அடிப்படையாகக் கொண்டு எண்ணிக்கை நூலை மூன்று பிரிவுகளாகவும் பிரிக்கலாம்.

பகுதி-1.

முதல் தலைமுறையினர் வாக்களிப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்குத் தங்களைத் தயாரிக்கின்றனர் (எண் 1-10)

பகுதி-2.

முதல் தலைமுறையினர் இறக்கிறார்கள். இரண்டாம் தலைமுறையினர் பாலைவனத்தில் வளர்கிறார்கள் (எண் 11-25)

பகுதி-3

இரண்டாம் தலைமுறையினர் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்குத் தங்களைத் தயாரிக்கின்றனர்.

இவ்வாறு எண்ணிக்கை நூலின் இடையில் வருகின்ற 11-25 வரையுள்ள பிரிவுகள் முன்னும் பின்னும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்கு மக்கள் தங்களைத் தயாரிக்கும் நிகழ்வுகளைக் கொண்ட பதிவுகளாக உள்ளன எனலாம்.

முதல் பகுதியான எண் 1-10 வரையுள்ள பிரிவுகளில் அனைத்தும் அமைதியாகச் செல்கிறது. மக்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். எண் 11 வது பிரிவில் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணம் தொடங்குகிறது. இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் நுழைந்து பயணத்தைத் தொடர்கையில் அவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுவதைப் பார்க்கிறோம். மோசேக்கு எதிராகவும் கடவுளுக்கு எதிராகவும் முணுமுணுக்கத் தொடங்குகிறார்கள். இந்த முணுமுணுப்பு பாலைவனப் பயணம் முழுவதும் தொடர்கிறது. எண் 11-25 வரையுள்ள பிரிவுகள்தான் நூலின் முக்கியமான பகுதி. இப்பகுதியில் பாலைவனப் பயணத்தின்போது நடந்த பத்து கிளர்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் கிளர்ச்சிகளின் தொகுப்பை உடைத்தவாறு சட்டங்கள் பற்றிய இரண்டு பகுதிகள் (எண் 15:1-16:30; 18:1-

19:22) புகுத்தப்பட்டுள்ளன. சட்டங்கள் இடையில் புகுத்தப்படுவதற்கு கிளர்ச்சிகள்தான் காரணங்களாக உள்ளன.

சீனாய் மலையில் மோசே வழியாக உடன்படிக்கைச் சட்டங்கள் கொடுக்கப்பட்டன. பொற்கன்றுக்குட்டி நிகழ்வுக்குப் பின் லேவியர் நூலில் காணப்படுகின்ற பல வழிபாட்டுச் சட்டங்கள் திருத்தங்களாகக் கொடுக்கப்படுகின்றன. அதைப்போல பாலைவனப் பயணத்தின்போது ஏற்படுகின்ற கிளர்ச்சிகளின் காரணமாக இந்தச் சட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. கிளர்ச்சிகளுக்கும் இந்தச் சட்டங்களுக்கும் இருக்கின்ற தொடர்புகள் சில இடங்களில் தெளிவாகத் தெரிகின்றன. உதாரணமாக, முதல் ஐந்து கிளர்ச்சிகளுக்குப் பின் (எண் 11-14) கடவுள் பலிகள் மற்றும் படையல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிறார். இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருடைய கட்டளைகள் அனைத்தையும் நினைவு கூர்ந்து செயல்படுத்துவதற்கு தலைமுறைதோறும் அவர்களின் உடைகளின் முனைகளில் குஞ்சங்கள் செய்து கட்டவேண்டும் என்ற கட்டளையும் கொடுக்கப்படுகிறது. மேலும் லேவியரான கோரவின் கிளர்ச்சிக்குப் பின் லேவியர்களுக்கும் குருக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்தும் விதத்தில் கடவுள் புதிய கட்டளைகளைக் கொடுக்கிறார். மேலும் மனித பிணத்தைத் தொடுபவர்களின் தீட்டை அகற்றுவதற்காக தீட்டகற்றும் தண்ணீர் செய்யும் முறைகளும் கற்பிக்கப்படுகின்றன.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு



# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஜெரால்டின் ஜோசப்
உதவிப் பங்குத்தந்தை, புனித.அந்தோணியார் திருத்தலம்,புலியகுளம், கோவை

## பாஸ்கா காலம் 4ம் வாரம் – ஞாயிறு
## 30.04.2023

**திருத்தூதர் பணிகள் 2/14, 36-41 – 1 பேதுரு 2/20-25 - யோவான் 10/1-10**

இறைமகன் இயேசு கிறிஸ்துவில் பிரியம் உள்ள எனது அன்பு சகோதரிகளே சகோதரர்களே உங்கள் அனைவருக்கும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்திலே வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆயன் இல்லாமல் ஆடுகளை மேய்க்க இயலாது அந்த ஆயனுக்கு விடுமுறை என்பது கிடையாது ஓய்வு என்பது பெரிதாக இருக்காது ஏனென்றால் கண்ணும் கருத்துமாக அந்த ஆடுகளை பாதுகாக்க வேண்டும். காரணம் மதில் சுவரில்லாத இடத்திலே அவர்கள் அந்த ஆடுகளை பட்டி அமைத்திருப்பார்கள். ஒரு சில இடங்களில் கதவுகளோடு கூடிய அந்த ஒரு வாயில் இருக்கும் அதனுடைய ஆயன் வேறு வாயில் பாதுகாவலர் வேறாக இருக்க வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அப்படி என்றால் வாயில் காவலர் வேறு ஆயம் வேறு என்று சொல்லுகிற பொழுது அது ஒரு குறுகிய வழியாக இருக்கும் அந்த வழியாக வருகிறவர்தான் ஆயன் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அப்படி பார்க்கிற பொழுது இங்கே அந்த வாயில் கதவு எதை சுட்டிக்காட்டுகிறது என்று சொல்லி பார்க்கிற பொழுது அந்த கதவு என்பது சட்ட திட்டங்களை குறிக்கிறது. கடவுளுடைய சட்ட திட்டங்களை யாரெல்லாம் ஏற்று செயல்படுகிறார்களோ அவர்களை சுட்டிக்காட்டுகிறது. ஆடுகள் எதிர்பார்ப்பு உடையதாக இருக்க வேண்டும் எதிர் பார்ப்பு என்பது. அந்த ஆயன் என்பவர் புனித படுத்துபவராக வழி நடத்துபவராக ஆசீர்வதிப்பவராக இருக்க வேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு குருவானவரும் இந்த பணியை செய்து வருகிறார். அப்படி என்றால் இதிலேயே முக்கியத்துவம் பெறுவது என்ன உள்ளே வருகிறவரா அல்லது கதவு இந்த இரண்டிலே எது என்று பார்க்கிற பொழுது கதவு தான் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அந்த வாயில் நுழைவாயில் என்பதுதான் முக்கியத்துவம் பெறுகிறது ஏன் என்று

சொல்லிப் பார்க்கிற பொழுது இயேசு தான் அந்த நுழைவாயில் ஆகவே தான் எது முக்கியத்துவம் பெறுகிறது ஆயன் கதவு வழியாக வருவார் ஆக அந்த கதவு வழியாக யார் வந்தாலும் சரி. வெவ்வேறு முதலாளியுடைய ஆடுகள் அங்கு அங்கு அடைக்கப்பட்டிருக்கும் ஆக கதவு வழியாக வருகிறவர் அந்த ஆயன் குரலைக் கேட்டு அவருடைய ஆடுகள் வெளிவரும் வேறு எதையும் சொல்லிவிட்டு வரமாட்டார் மாறாக தன்னுடைய குரலை மட்டும் எழுப்புவார். ஆகவே தான் அது சரியான ஒன்றாக இருக்கிறது இயேசுவே அந்த நுழைவாயில் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதிலே இரண்டு முக்கியத்துவம் பெறுகின்றன முதலாவது சரியான முறையில் அணுகுவது இரண்டாவது சரியான அணுகு முறையை வரையறுப்பது. இந்த இரண்டுக்குமே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிப் பார்க்கிற பொழுது சரியான முறையில் அணுகுவது என்று சொல்லுகிற பொழுது ஆயன் சரியான முறையில் வருவார் அவற்றை ஆடுகள் புரிந்து கொள்ளும் சுவரை எட்டிக் குதிப்பவர் திருடரும் கொள்ளையடிக்கிரவருமாக இருக்ப்பார் என்பதை கூறுகிறது. அதுதான் சரியான அணுகுமுறை அணுகுமுறையை வரையறுப்பது என்பது அந்த கதவு அந்த கதவை வரையறுக்க அவர் பாதுகாக்கிறவர் கடவுள் என்பதை இது சுட்டிக்காட்டுகிரது. ஆகவே நம்முடைய புரிந்து கொள்ளுகிற தன்மையை அவர் எதிர்பார்க்கிறார் ஏன் புரிந்து கொள்கிற தன்மை என்று சொல்லுகிற பொழுது ஐந்தறிவு ஜீவன் ஆடு தன்னுடைய ஆயனுடைய குரலை கேட்டு புரிந்து கொண்டு அவரை பின்தொடர்கிறது நாம் என்ன செய்கிறோம் ஆறறிவு படைத்த நாம் பங்குத்தந்தையாக இருக்கிற நம்முடைய ஆயினுடைய நம்முடைய மறைமாவட்ட ஆயருடைய குரலை கேட்டு அதன் பின் தொடர்கிறோமா. ஆம் நம்முடைய புரிந்து கொள்ளுகிற தன்மையை பொறுத்துதான் நாம் சிதறிப் போவதும் ஆயனைப் பின் தொடர்வதும் அடங்கியிருக்கிறது. என்பதை இது சுட்டிக்காட்டுகிறது ஆகவே நாம் சரியாக பின் தொடர வேண்டும் தொலைந்து போய்விடக் கூடாது என்பதை இங்கு இயேசு சுட்டி காட்டுகிறார். ஆகவே நம்முடைய குருக்கள் உடைய குரலை கேட்டு அறிந்து தெரிந்து பின் தொடர்க ஆற்றலைக் கேட்டு மன்றாடுவோம் ஆமென்





# பாஸ்கா காலம் நான்காம் ஞாயிறு

தி.ப. 2:14அ, 36-41, 1 பேது. 2:20ஆ-25, யோ. 10:1-10

**30-05-2023**




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

திருமுழுக்கின் வழியாக தூய ஆவியைக் கொடையாகப் பெற்றுள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் இன்றைய பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய தினத்தை நல்லாயன் ஞாயிறாகவும், இறை அழைத்தல் ஞாயிறாகவும் கொண்டாடி மகிழ திருஅவை நம்மை அழைத்துள்ளது. நல்லாயனாம் திருஅவையின் குரலுக்கு செவி சாய்த்து, நிறைவாழ்வைப் பெறும் பொருட்டு, நம் ஆன்மாக்களின் ஆயரும், கண்காணிப்பாளருமான இறைவனை நாடி நாம் வந்துள்ளோம்.

இயேசுவே நாம் தந்தையிடம் செல்லும்வழி, அவர் வழியாகவே நாம் தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறு பெற்றோம் என்பதை எடுத்துரைத்து, அவரது வார்த்தைகளுக்கு செவிமடுத்து, அவரைப் பின்பற்றி நடப்பவன் நிறைவாழ்வைப் பெறுவான் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

இயேசு கிறிஸ்துவும் திருமுழுக்கு யோவானும் பயன்படுத்திய மனந்திரும்புங்கள் என்ற மந்திரச் சொல் இதோ இன்று இத்திருப்பலியிலும் எதிரொலிக்கிறது.

ஒருவரை பெயர் சொல்லி அழைப்பதென்பது அவர்மேல் நமக்குள்ள அன்பையும், உரிமையையும் காட்டுகிறது. நம் நல்லாயன் இயேசுவும் இன்றைய திருப்பலி வழியாக நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். அவரது குரலைத் தெரிந்து கொண்டு அவரது அழைப்பினை ஏற்று அவரைப் பின்தொடர்ந்து பயணிக்க இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு, ஆகையால் தேவையான வேலையாட்களை தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளராம் நம் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

பெந்தகோஸ்து திருநாளில், உயிர்த்த இயேசுவின் மீட்புத் திட்டத்தினை யூத மக்களுக்கு விளக்கி தூய பேதுரு ஆற்றிய மதிப்புமிக்க மகத்தான அருளுரையின் ஒரு பகுதியே இன்றைய முதல் வாசகமாக திருஅவை நமக்கு வழங்கியுள்ளது. இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்றும், மெசியா என்றும் பறைசாற்றி நம்மை மனம் திரும்ப அழைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நற்செயல்களுக்காக துன்பத்தை ஏற்கத் துணிந்தவனே கடவுளுக்கு உகந்தவனாகிறான் என்ற புனித பேதுருவின் தியாக சிந்தனையே இன்றைய இரண்டாம் வாசகம். இயேசுவே ஆன்மாவின் ஆயனாக இருக்கிறார் என்ற கருத்தை மையமாகக் கொண்ட இவ்வாசகத்தை கவனமாகக் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) வாழ்வும் வழியுமான அன்பு இறைவா, நல்ல ஆயனாகவும், நல்ல வாயிலாகவும் இருந்து அமைதி வழியில் மக்களை வழி நடத்திச் செல்ல உம்மால் நியமிக்கப்பட்ட உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் உம் திருமகன் இயேசுவைப் போல் சுயசிந்தனையும் தொலைநோக்குப் பார்வையும் பெற்ற நல்லாயர்களாய், நல்ல வழிகாட்டிகளாய் திகழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) பசும்புல் மேய்ச்சலுக்கும், தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்லும் நல்லாயனாம் அன்பு இறைவா, எம்மை ஆளும் அரசியல் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் உம் திருக்கரங்களில் ஒப்படைக்கிறோம். நல்லாயன் தன் ஆடுகளை அறிந்திருப்பதுபோல், அவர்கள் தன் மக்களை நன்கு அறிந்து கொண்ட, அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்ட நல்ல தலைவர்களாய், தியாக உள்ளம் கொண்டவர்களாய் அவர்கள் ஒவ்வொருவரும் விளங்கிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3 அறுவடையின் உரிமையாளரே இறைவா, அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்ற உமது அழைப்பினை இன்றைய இளைஞர்களும் இளம் பெண்களும் ஏற்று, உமது அருட்பணியை தொடர்ந்து ஆற்றவும், உமது மறை உடலாகிய திருச்சபைக்கு அணிகலனாகத் திகழவும், உலகின் உப்பாகவும், ஒளியாகவும், வாழ்வாகவும், வழியாகவும் அவர்கள் விளங்கிடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) வாழ்வுதரும் உணவும், உயிர் தரும் ஊற்றுமாகிய இறைவா, பலமுறை நாங்கள் எங்களது குருக்களாகிய ஆயர்களின் குரலுக்கு செவிமடுக்கத் தவறி இருக்கிறோம். அவர்களது குரலுக்கு செவிமடுத்து, அவர்களது வழிகாட்டலில் வாழ்ந்தோமென்றால் வாழ்வில் ஒரு துன்பமும் இல்லை என்பதையும், அப்போதுதான் நீர் அளிக்கும் முடிவில்லா வாழ்வைப் பெற முடியும் என்பதையும் நன்கு உணர்ந்தவர்களாய் நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை

# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

சோம்பறித்தனம் இன்று சுகமாயிருக்கும்
நாளை படுகஷ்டமாயிருக்கும்
கடின உழைப்பு இன்று படுகஷ்டமாயிருக்கும்
நாளை சுகமாயிருக்கும்

மனிதர்கள், பணம், கவலை
இம்மூன்றும் நம்மை
ஆளவிடக்கூடாது

தீய மனிதர்களுக்காக,
தேவையற்றவைகளுக்காக
நம் பொன்னான நேரத்தை
வீணடிக்கக் கூடாது காரணம்
நம் வாழ்வு விலை மதிப்பற்றது.

இறந்த மீனைத்தான்
நீரோடை தன்வழியில்
இழுத்துச் செல்லும்

தகுதியற்றவரோடு தர்க்கம் செய்வதைவிட
அமைதியாயிருப்பது புத்திசாலித்தனம்

சோர்ந்து போகாமல், மெதுவாகவானாலும்
ஒவ்வொரு வினாடியும் முன்னேறுபவரை
இந்த பிரபஞ்சம் கைவிடவே விடாது

உண்மையை நகைச்சுவையோடு சொல்ல வேண்டும்
இல்லையென்றால், சங்குதான்




## 30.4.2023 – பாஸ்கா 4ம் வாரம் ஞாயிறு

திருத்தூதர் பணிகள் 2/14, 36–41

1 பேதுரு 2/20–25

யோவான் 10/1–10

## 1.5.2023 – திங்கள்

தொழிலாளரான புனித.யோசேப்பு

திருத்தூதர் பணிகள் 11/1–18

மத்தேயு 13/54–58

## 2.5.2023 – செவ்வாய்

திருத்தூதர் பணிகள் 11/19–26

யோவான் 10/22–30

## 3.5.2023 –புதன்
## புனிதர்கள்
## பிலிப்பு, யாக்கோபு
## திருத்தூதர்கள்

1 கொரிந்தியர 15/1–8

யோவான் 14/6–14

## 4.5.023 – வியாழன்

திருத்தூதர் பணிகள் 13/13–25

யோவான் 13/16–20

## 5.5.2023 – வெள்ளி

திருத்தூதர் பணிகள் 13/20–33

யோவான் 14/1–6

## 6.5.203 – சனி

திருத்தூதர் பணிகள் 13/44–52

யோவான் 14/7–14

## 7.5.2023 – பாஸ்கா 5ம் வாரம் ஞாயிறு

திருத்தூதர் பணிகள் 6/1–7

1 பேதுரு 2/4–9

யோவான் 14/1–12

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 43

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை

### குறள் விளக்கம்

தென்புலத்தார், தெய்வ விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்

### சிந்தனை

இருப்பதைக் கொடுத்தால் நினைப்பது கிடைக்கும் இந்த வாசகத்தைப் பார்த்த இளைஞனின் பையில் இருந்ததென்பதோ முப்பது ரூபாய் தான். சாப்பாட்டு பொட்டலங்களை வாங்கிக் கொண்டு அமர்ந்தவன் கண்களில் உணவின்றி தவித்த இரு குழந்தைகளும் ஒரு முதியவரும் பட்டனர். பொட்டலங்களைக் கொடுத்தான். முதியவர் மகிழ்ந்து தன்னிடமிருந்த பழைய செப்பு நாணயங்களைக் கொடுத்தார். அதே நாளில் பழைய நாணயங்கள் சேகரிக்கும் கோடீஸ்வரர் ஒருவரை காண நேர்ந்தது. இந்த நாணயங்கள் நல்ல விலைக்கு போயின. கொடுப்பவர்களே பெறுகிறார்கள் என்பது புரிந்தது.

இல்வாழ்க்கை என்னும் இந்த அதிகாரத்தில் இல்லறத்தில் இருக்கின்றவர்களின் தலையாய கடமை விருந்தோம்பல்தான் என்று வள்ளுவர் வலியுறுத்துவது போன்று தெரிகிறது. முதல் இரண்டு குறள்களில் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தன்னை அடுத்து இருப்பவர்களுக்கும் உதவி செய்வது இல்லறத்தார் கடமை என்று கூறிய வள்ளுவர் இந்த மூன்றாவது குறளில் இல்லறத்தில் இருக்கின்றவர்கள் ஐந்து பேருக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

அதாவது இறந்து போனவர்களை நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களை போற்றுதல், சுற்றத்தாரை, விருந்தினரை பேணுதல் இறுதியாக தன்னையும் பேணிக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஆகவே, நமது அன்பு யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கணியன் பு+ங்குன்றனார் சொல்வது போன்று இல்லறத்தான் வாழ வேண்டும். அனைவருக்கும் உதவி செய்யக் கூடியவனாக அனைவருக்கும் உறவினராக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

வேதாகமும் தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமயவாழ்வு எதுவெனில்,

துன்புறும் அனாதைகளையும்
கைம்பெண்களையும் கவனித்தலும்
உலகத்தால் கறைபடாதபடி தம்மைக்
காத்துக் கொள்வதும் ஆகும்
யாக் 1:27 என்கிறது.

**கொடுத்து வாழ்வோம்.**





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm




திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்



# நலம் தரும் இயற்கை வளம்

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக் கல்வி
உங்களுக்குத் தெரியுமா...!
உடலின் அனைத்து பாகங்களின் வலியையும் உணரும் மையம்
மூளையாக இருந்த போதிலும்
மூளை ஒருபோதும் வலியை உணராது.
மூளை தூங்குவதில்லை.
இன்னும் சொன்னால் கண் விழித்திருக்கும் நேரத்தை விட உறங்கும் போதுதான் மூளை சுறுசுறுப்பாக இருக்கும்.
நாம் கேட்கும், பார்க்கும், படிக்கும், உணரும், தொடும் மற்றும் சுவாசிக்கும் அனைத்தையும், நம் மூளை சேமிக்க வல்லது.
மூளை இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.
மூளையின் வலது பகுதி உடலின் இடது பாகுதியையும்,
அதன் இடது பகுதி உடலின் வலது பாகுதியையும்
கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்றன.
18 வயதோடு மூளை தனது வளர்ச்சியை நிறுத்திக் கொள்கிறது.

மூளைக்கு 8 தொடக்கம், 10 வினாடிகள் வரை இரத்த ஓட்டம் கிடைக்காவிட்டால்
அது சுய நினைவை இழந்துவிடும்.
மூளைக்கு ஆக்ஸிஜன் துண்டிக்கப்பட்டால் 4 முதல் 6 நிமிடங்கள் வரை அது உயிர்வாழும்,
அதன் பிறகு அது இறக்கத் தொடங்கும்.
அதன் பிறகு மீட்கப்பட்டால் கூட அதன் பல பாகங்கள் சிதைந்திருக்கும்.
ஒருவரால் ஒருபோதும் அவரையே கூச்சப்படுத்திக்கொள்ள முடியாது.
மற்றவர்கள் நம் உடலை தொடுவதையும் நம்மை நாமே தொடுவதையும்
மூளையால் வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியும்.
மூளை சுயமாக தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ளும் வல்லமை கொண்டது.
மனித மூளையின் ஒரு பகுதிக்கு ஏதாவது ஒரு கட்டத்தில் ஒரு பாதிப்பு ஏற்பட்டால்
மூளையின் பாதுகாப்பான பகுதி பாதிக்கப்பட்ட பகுதியின் செயற்பாடுகளை சுமந்து கொள்ளும்.
இப்போதாவது உங்கள் தலைக்குள்
விலைமதிக்க முடியாத
ஒரு பொக்கிஷம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா!!!



நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு
சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063